குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.164 /2013

அ.சா.5

2025–ம் ஆண்டு ஏப்ரல் 01–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 05–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கந்தசாமி | தொழில் | |
| தந்தை பெயர் | பெருமாள் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 04.20 மணி,

Accused Ganesan Absent. Petition filed U/s. 317 CrpC filed and allowed. Advocate Mr.K.Sivakumar present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

நான் பெரியபுதூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந் 2013 ம் வருடம் ஒரு நாள் எனது உறவினர் இளங்கோ என்பவருக்கு லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக போன் மூலம் தகவல் கிடைத்தது. அதன் பின்பு நான் இளங்கோவின் பிரேத விசாரணையின் போது உடனிருந்து சாட்சி கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். **(அந்த கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** விபத்து பற்றி கேள்விபட்டு ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று இளங்கோவின் உடலை பார்த்தேன். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை. போலிசார் பிரேத விசாரணை செய்ததற்காக என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 13.04.2013 ம் தேதி 17.00 மணியளவில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்த போது நான் சாட்சியாக உடனிருந்து சம்பவ

இடத்தில் வைத்து பார்வை மகஜரில் சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை. இல்லை.**

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 04.27 மணி**

ஒம்/—ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.